## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.5.4.I

எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

## எண்ணியல் - தசம எண்களின் வகுத்தல் - தினவாழ்க்கைச் சிக்கல்கள் - பயிற்சி

1) சம பக்க அளவு கொண்ட ஒரு பூங்காவின் சுற்றளவு 6.35 கி.மீ. அதன் ஒரு பக்க அளவு 1.27 கி.மீ எனில், அதன் வடிவம் என்ன?

பூங்காவின் சுற்றளவு ▶▶ ஒவ்வொரு பக்கத்தின் அளவு ▶▶ பக்கங்களின் எண்ணிக்கை ▶▶ விடை பகர்தல்

பூங்காவின் சுற்றளவு = 6.35 கி.மீ

பூங்காவின் ஒவ்வொரு பக்கத்தின் அளவு = 1.27 கி.மீ

∴ பூங்காவின் பக்கங்களின் எண்ணிக்கை $= \frac{6.35}{1.27} = \frac{6.35 \times 10^2}{1.27 \times 10^2}$

$= \frac{6.35 \times 100}{1.27 \times 100}$

$= \frac{635}{127} =$ 5 பக்கங்கள்

$$127 \overline{)635} = 5, \quad 635, \quad 0$$

5 பக்கங்களைக் கொண்டுள்ளதால் பூங்கா **ஐங்கோண வடிவில்** இருக்கும்.

2) கலைச்செல்வன் 11.25 செ.மீ பக்க அளவுள்ள சதுர வடிவத் தாளை 1.25 செ.மீ × 1.25 செ.மீ பரிமாணமுள்ள சிறுசிறு காகிதத் துண்டுகளாக வெட்டுகிறான் எனில், அவனுக்கு எத்தனை காகிதத் துண்டுகள் கிடைக்கும்?

சதுர வடிவத் தாளின் பரப்பளவு ▶▶ வெட்டப்படும் சிறுசிறு காகிதத் துண்டுகளின் பரப்பளவு ▶▶ கிடைக்கும் காகிதத் துண்டுகளின் எண்ணிக்கை

சதுர வடிவத் தாளின் பரப்பளவு = ① பக்கம் 11.25 × பக்கம் 11.25

$= 126.5625 =$ 126.56 ச.செ.மீ (∵ இரு தசம இடத்திருத்தமாக)

வெட்டப்படும் காகிதத் துண்டுகளின் பரப்பளவு = ② பக்கம் 1.25 × பக்கம் 1.25

$= 1.5625 =$ 1.56 ச.செ.மீ (∵ இரு தசம இடத்திருத்தமாக)

∴ கிடைக்கும் காகிதத் துண்டுகளின் எண்ணிக்கை $= \frac{126.56}{1.56} = \frac{126.56 \times 10^2}{1.56 \times 10^2}$

$= \frac{126.56 \times 100}{1.56 \times 100} =$ ③ $\frac{12656}{156} \simeq$ 81 துண்டுகள்

①

```
      1 1.2 5
  ×   1 1.2 5
  -----------
      5 6 2 5
    2 2 5 0
  1 1 2 5
1 1 2 5
-------------
1 2 6.5 6 2 5
```

②

```
    1.2 5
×   1.2 5
---------
    6 2 5
  2 5 0
1 2 5
---------
1.5 6 2 5
```

③

```
        81
156 )12656
     1248
      176
      156
       20
```

கலைச்செல்வனுக்கு **81 காகிதத் துண்டுகள்** கிடைக்கும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/Zq8L2i_Ifks

## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Friday 7th October, 2022 :: 04:56 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**